**தலைப்பு 297 – கம்பனி பதிவாளர் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

கம்பனி பதிவாளர் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கம்பனி பதிவாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 யூன் 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 14 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனி பதிவாளர் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் நன்நடத்தை, திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

  எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) கம்பனி பதிவாளர் திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 அரசாங்க உத்தியோகத்தர்களின முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட இரண்டு உத்தியோகத்தர் களிடமிருந்தும் 18 ஆண்டுகளை விஞ்சிய ஒரு உத்தியோகத்த ரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 120,741 ஆன கடன் மீதியொன்றை இதுவரை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்ட காலமாக முன் கொண்டு வரப்படும் கடன் மீதிகளைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சட்டமா அதிபர் திணைக்களத்தினதும் அரச கணக்குகள் திணைக்களத்திடமிருந்தும் தேவையான ஆலோசனைகள் கோரப்பட்டுள்ளதுடன் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு 2018 ஆம் ஆண்டின் போது இரண்டு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன |
| (ஆ) | வேலை இடைநிறுத்தத்திற்கு உள்ளான உத்தியோகத்தரொருவரால் தீர்க்கப்படாத ரூபா 17,000 ஆன கடன் மீதி 13 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் இதுவரை இக்கடன் மீதியை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | தீர்வுசெய்யப்படாத கடன் மீதிகளை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இந்த உத்தியோகத்தரின் விபரங்களை தருமாறு கோரி 2018 ஒக்டோபர் 31 ஆந் திகதி ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளருக்கு வேண்டுகோள் ஒன்று சமர்பிக்கப்பட்டுள்ளது விபரங்கள் கிடைத்தவுடன் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.2 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை யொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செயற்பட வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை செய்ய வேண்டும். அம் மீளாய்வு எழுத்து மூலமாக மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிகாரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்காக கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெற்றிடமாகவுள்ள உள்ளக கணக்காய்வாளர் பதவிக்காக கணக்காளர் ஒருவர் பதில் கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்த உள்ளக கணக்காய்வு விசாரணைகளில் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்களுக்காக தேவையான மாற்றங்களை செய்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்காக எடுக்கப்பட்ட நடைமுறைகளின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு தாமதம் காரணமாகவே அனுப்ப முடியாதிருந்ததுடன் எதிர்காலத்தில் இவ்வாறான தாமதங்கள் ஏற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்தி குறித்துக் கொள்ளுகின்றேன். |
| (ஆ) | உள்ளக கணக்காய்வு செயற்பாடு முறையாக செயற்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான நடைமுறையொன்று உள்ளதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அறிக்கையின் 3.2 பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் அத்தேவைப்பாடு நிறைவேற்றிக் கொள்ளவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் பதவிக்காக கணக்காளர் சேவையின் 111 ஆம் தர உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்ததுடன், அவர் 2018 ஆகஸ்ட் 02 ஆந் திகதி முதல் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டமையால் இவ்வெற்றிடம் ஏற்பட்டிருந்தது. இப்பதவி கணக்காளர் சேவையில் 1 ஆந் தரத்தின் பதவியொன்றாக மீண்டும் திருத்தம் செய்யப்பட்டு முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. எனினும் பதில் கடமை அடிப்படையில் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் கணக்காளர் |

நியமிக்கப்பட்டுள்ளார்.

**1.6.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| (அ) 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கை சட்டம் | | | |
| (i) 5(1) மற்றும் 5(2) ஆம் பிரிவு மற்றும் 2(1) உப பிரிவு | கம்பனி பதிவாளருக்கு எழுத்து மூலம் அல்லது கட்டளையிடப்பட்ட அதிகாரத்தை செயற்படுத்த ஒப்பந்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட ரூபா 5,000,000 இனை மிகைத்த ஒவ்வொரு பொது ஒப்பந்த உடன்படிக்கையும் இச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பதிவு செய்யப்பட வேண்டும். பெறுகை களுக்காக உள்ளடக்கு வதற்கு எண்ணியுள்ள 24,345 பேர் ஒப்பந்தங்களில் மீளாய்வாண்டில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தங்கள் உருவாக்கப்பட்டதன் பின்னர் ஒப்பந்த உடன்படிக்கையில் 398 பேர் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தனர். | ரூபா 5 மில்லியனை மிகைத்த ஒவ்வொரு பொது ஒப்பந்த உடன்படிக்கையும் இச்சட்டத்தின் பிரிவின் பிரகாரம் பெறுகை விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் போது ஒப்பந்தம் வழங்கப்பட்டதன் பின்னரான இரண்டு சந்தர்ப்பங்களின் போதும் பதிவு செய்வதற்கு முறையான நடைமுறைகள் எடுக்கப்பட வேண்டும். | சகல அமைச்சின் செயலாளர்கள் திணைக்களத் தலைவர்கள் மற்றும் நிறுவணங்கள் இது தொடர்பாக அறிவுறுத்தப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் வருடாந்தம் பொது ஒப்பந்தங்கள் பதிவு எண்ணிக்கை அதிகரித்துள்ளன. கம்பனி பதிவாளர் திணைக்களத்தின் பொது ஒப்பந்த உடன்படிக்கையும் இணைய வழி மூலம் ஒரிரு தினங்களில் பதிவு செய்யும் வேலைத் திட்டமொன்றும் அறிமுகப்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளது. |
| (ii) 11(3) ஆம் பிரிவு | சட்டத்தின் 11 (3) பிரிவின் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழொன்று 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு | பதிவுகள் ஓராண்டினை மிகைக்கும் சந்தர்ப்பத்தில் ஒப்பந்தங்களின் பதிவினை | உடன்படிக்கை காலம் முடிவடைந்த பொது ஒப்பந்த உடன்படிக்கை மீண்டும் பதிவினை புதுப்பித்தல் அந்தந்த நிறுவனங்களின் |

| | | |
|---|---|---|
| உற்பட்டு கூடுதலான காலமொன்றுக்காக காலத்திற்கு காலம் புதுப்பிக்கப்பட வேண்டும். எனினும் ஓராண்டு காலம் கடந்து மீண்டும் பதிவினை புதுப்பித்தல் மூலம் பெற்றுக் கொண்ட வருமானம் எதுவும் இதுவரை அறிக்கையிடப்பட்டிருக்க வில்லை. | புதுப்பிப்பதற்காக நடவடிக்கை எடுத்தல். | கடமையாகும். அறிமுகப்படுத்தப்படவுள்ள இணைய மூலம் ஓராண்டு கழிந்ததன் பின்னர் மீண்டும் பதிவினைப் புதுப்பதற்காக ஒப்பந்தம் வழங்கப்பட்ட நிறுவனத்திற்கு முறைமை ஊடாக தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வருமானக் குறியீட்டு இல. - 20.03.02.10 | | |
| (i) | கம்பனிச் சட்டத்தின் 131(1) மற்றும் (2) பிரிவின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் வரையறுக்கப்பட்ட கம்பனிகளில் ஆண்டறிக்கைக்காக அறவிடப்பட வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 658.20 மில்லியனாக இருந்தது. இந்நிலுவை வருமானத்தில் மீளாய்வாண்டில் ரூபா 36.10 மில்லியன் மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததாக அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அது 5 சதவீதமான மிகவும் சிறிய அளவில் இருந்தது. அதன் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக திணைக்களத் தினால் போதியளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக அவதானிக்கப்படவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும் | கம்பனி பெயர்களை அங்கீகரித்தல், கம்பனி ஆண்டறிக்கைகளை பதிவு செய்தல் மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை வழங்குதல் போன்றவை அதிகரித்தமையால் உள்ளவாறான வருமானம் முன்னைய ஆண்டினை விட அதிகரித்துள்ளது. |
| (ii) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வருமான வகைப்படுத்தல் அறிக்கை பதிவு செய்யப்பட வேண்டிய கம்பனிகளின் எண்ணிக்கை 6,893 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டில் நிதி | பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு பொது கம்பனியிடமிருந்து நிதி அறிக்கைகளை பெற்றுக் கொள்ள | பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு பொது கம்பனியிடமிருந்து நிதி அறிக்கைகளை கோர்வை செய்யப்பட வேண்டியதுடன் நிதி அறிக்கைகள் கோர்வைப்படுத்தப்படுத்துமாறு |

| | | | |
|---|---|---|---|
| | அறிக்கைகளை பதிவு செய்த கம்பனிகளின் எண்ணிக்கை 2110 ஆக இருந்தது. அதிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த மொத்த வருமானம் 4.22 மில்லியனாக இருந்ததுடன் அதில் திரண்ட நிதிக்கு செலவு வைக்கப்பட்ட ரூபா 1.4 மில்லியனாக இருந்தது. | வேண்டியதுடன் நிலுவை வருமானம் தாமதமின்றி சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவ்வாறே கட்டளைச் சட்டத்தில் 170 (1) மேற்படி பிரிவின் பிரகாரம் நிதி அறிக்கை பதிவு செய்யப்பட வேண்டிய கம்பனிகள் இனங்காணப்பட்டு அவற்றின் நிதி அறிக்கைகளை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. | அறிவித்து கம்பனிகள் மற்றும் அதன் பணிப்பாளர்களுக்கு கடிதம் மூலம் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. |
| (iii) | 2005 இன் 11 ஆம் இலக்க சங்க கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் சங்கங்களினால் ஆண்டறிக்கை கோர்வை செய்யப்பட வேண்டிய போதிலும் சங்க கட்டளைச் சட்டத்தின் 6(3) பிரிவின் கீழ் 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது 178 சங்கங்களின் பெயர்கள் பதிவழிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக ஆணடறிக்கை கோவை செய்யப்பட வேண்டிய 12,307 சங்கங்களிலிருந்து சேகரிக்கப்பட வேண்டிய வருமானம் ரூபா 12.3 மில்லியனாக இருந்தது. எனினும் மீளாய்வாண்டில் வருடாந்த அறிக்கைகள் கோர்வை செய்திருந்த சங்கங்கள் 180 மாத்திரமாக இருந்தன. 2017 ஆம் ஆண்டில் 204 சங்கங்கள் வருடாந்த அறிக்கைகளை கோர்வை செய்திருந்தன. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டினை விட மீளாய்வாண்டில் 24 சங்கங்கள் வருடாந்த அறிக்கை கோர்வையிடல் குறைவடைந்துள்ளன் 2018 ஆம் ஆண்டிற்குரிய நிலுவை வருமானம் மாத்திரம் ரூபா 12.12 மில்லியனாக இருந்ததுடன் 2018 ஆம் ஆண்டின் | பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு சங்கமும் ஆண்டறிக்கைகளை கோர்வை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | செயற்பாட்டிலுள்ள சங்கங்களின் வருடாந்த அறிக்கைகள் மாத்திரம் கோர்வையிடப்பட்ட போதும் தற்போது அநேகமான சங்கங்கள் செயற்பாட்டு நிலமையில் காணப்படவில்லை. வருடாந்த அறிக்கைகளை கோர்வையிடுமாறு அறிவித்து சங்கங்களுக்கும் அதன் பணிப்பாளர்களுக்கும் கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துக் கொள்கின்றேன். |

போது மேலும் 1,086 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

**(ஆ) வருமான குறியீட்டு இலக்கம் - 10.03.07.08**

-----------------------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது ரூபா 1500 மில்லியனான ஆரம்ப வரி வருமான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்ட போதிலும் ஆண்டிலுள்ள இவ்வருமான தலைப்பின் கீழ் வருமானம் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை வர்த்தமானி அறிவித்தலொன்று வழங்கப்படாமல் வரி அறவிடப்படாமையால் தோன்றிய சிக்கலான நிலைமையினால் வரி அறவீடு நிறுத்தப்பட்டிருந்தது. | மதிப்பீடு தயாரிப்பதற்கு முன்னர் வருமான சேகரிக்கும் இயலுமை முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு முறையான நடைமுறையொன்றின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். | நிதிச் சட்டம் அங்கீகரிக்கப்படும் வரை இதனை நிறுத்துவதற்கு தற்காலிகமாக நிறுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்ததால் 2018 ஆம் ஆண்டின் போது இவ்வருமான தலைப்பில் எவ்வித வருமானமும் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளுக்கு இடையே 15 கம்பனிகள் மாத்திரம் முன்னைய ஆண்டிற்கு ரூபா 890,000 ஆன வரியை கொடுப்பனவு செய்திருந்ததுடன் அவ்வாறு சேகரிக்கப்பட்ட சகல வருமானங்களும் திறை சேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | சட்டரீதியான சிக்கல்லொன்று ஏற்படக்கூடுமென என்பதால் அது தொடர்பாக கருத்திற் கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட சகல கம்பனிகளும் இந்த வரியை கொடுப்பனவு செய்ய வேண்டியதுடன் இதற்கு முன்னர் இந்த வரியை கொடுப்பனவு செய்துள்ள கம்பனிகள் இவ்வரிக் கொடுப்பனவுகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அறவிடப்படுகின்ற பணம் திறைசேரி செயலாளரின் 10.03.07.08 ஆம் இலக்க வருமான தலைப்பிற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ் வரிக் கொடுப்பனவு செய்யாத கம்பனிக்காக வரி செலுத்துவதற்கு 2019 திசெம்பர் 31 வரை காலம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வரி கொடுப்பனவை தவிர்ப்புச் செய்பவர்களுக்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை சட்டத்தின் 33 மற்றும் 34 ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 ஏனைய அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கம்பனி பதிவாளர் நாயகத்தினால் வெளித்தரப்பினருக்கு எதிராக 08 நீதிமன்ற செயற்பாடுகள் தொடுக்கப்பட்டிருந்ததுடன் கம்பனி பதிவாளர் பிரதிவாதியாக குறிப்பீட்டு வெளிதரப்பினரால் மீளாய்வாண்டில் 29 நீதிமன்ற செயற்பாடுகள் தொடுக்கப்பட்டிருந்தன. | கம்பனிச் சட்டத்தின் நியதிகளுக்கு இணங்க திணைக்களம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் கம்பனிகளாலும் சட்ட விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுப்பதை ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். | மீளாய்வாண்டில் கம்பனி கம்பனி பதிவாளர் நாயகத்தினால் வெளித்தரப்பினருக்கு எதிராக 08 நீதிமன்ற செயற்பாடுகள் தொடுக்கப்பட்டிருந்ததுடன் கம்பனி பதிவாளர் பிரதிவாதியாக குறிப்பீட்டு வெளிதரப்பினரால் மீளாய்வாண்டில் 29 நீதிமன்ற செயற்பாடுகள் தொடுக்கப்பட்டிருந்தன. |

## 4. நல்லாளுகை

### 4.1 பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சேவை நாடுகளின் தேவைப்பாட்டின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட கம்பனி தொடர்பாக சான்றிதழ் வழங்குதல் இத் திணைக்களத்தின் பிரதான செயற்பாடாக இருந்த போதிலும் சேவை நாடுகளுக்கு அச் சேவைகளை வழங்குவதற்காக கருத்திற் கொள்ளப்படக் கூடிய கால தாமதமொன்று எடுப்பதாக அவதானிக்கப்பட்டது. வருடாந்த அறிக்கை கோவையிடல் தொடர்பாக முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தாமை காரணமாக சேவை நாடுனர்களுக்கு சேவை வழங்குவதற்காக இவ்வாறு அசாதாரண தாமதமொன்று அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்தின் பிரதான பணிகளை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று அறிமுகப்படுத்துவதன் மூலம் இச் செயற்பாட்டை துரிதப்படுத்துதல். | கோவைகளில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாக அறிவித்து அவர்களுக்கு கூட்டிணைத்து இயலுமான வகையில் துரிதமாக பொதுமக்கள் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அர்ப்பணித்துள்ளதாக |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| தொடர்புடைய 10 துறைகளுடன் கூடிய ‘‘ஏ’’ தர திணைக்களமொன்றான இதில் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதல் வெற்றிடமாக காணப்பட்டு வருவதுடன் அப்பிரிவிற்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 3 ஆக இருந்தனர் | திணைக்கள செயற்பாடுகளுக்காக நேரடி தாக்கம் செலுத்தும் இப்பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு துரிதமாக மேற்கொள்ளப்படல் வேண்டும். | கம்பனி பரிசோதகர் பதவிக்காக ஆட்சேர்ப்பு நடைமுறையை மீண்டும் திருத்தம் செய்வதற்கு நேர்ந்தமையால் இந்த ஆட்சேர்ப்பு உரிய கால எல்லைக்குள் மேற்கொள்ள முடியாமல் இருந்தது. தற்போது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் விண்ணப்பங்கள் கோரி பரீட்சை ஆணையாளர், நாயகத்தின் மூலம் ஆட்சேர்ப்பு பரீட்சையை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 5. மனித வளமுகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட 10 கம்பனி பரிசோதகர் பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டதுடன் அந்த பதவிகள் நேரடியாக கம்பனிகளின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவ துடன் தொடர்புபட்டதாக காணப்படுகின்றது. இப் பதவிகள் முழுமையாக வெற்றிடங்களாக காணப்பட்டமையால் கம்பனிகளை ஒழுங்குபடுத்துதல் பலவீனமான நிலைமையில் இகாணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது. | திணைக்கள செயற்பாடுகளுக்காக நேரடி தாக்கம் காணப்படும் இப்பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு துரிதமாக மேற்கொள்ளப்படல் வேண்டும். | கம்பனி பரிசோதகர் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையை மீண்டும் திருத்தம் செய்வதற்கு நேர்ந்தமையால் இந்த ஆட்சேர்ப்பினை உரிய கால எல்லைக்குள் மேற்கொள்ள முடியாமல் இருந்தது. தற்போது அரச சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் விண்ணப்பங்கள் கோரி பரீட்சை ஆணையாளர், நாயகத்தின் மூலம் ஆட்சேர்ப்பு பரீட்சையை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |